முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 115/2021

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி . . 1

| | | |
|---|---|---|
| பெயர் | . . | அலெக்ஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | . . | |
| வயது | . . | |
| தொழில் | . . | |
| கிராமம் | . . | |
| தாலுக்கா | . . | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக இருந்து வருகிறேன். கடந்த 16.12.2019 அன்று நடந்த சாலை விபத்தில் ஈடுபட்டதாக சொல்லும் இருசக்கர வாகன பதிவு எண். டி.என். 73 கியூ 1714 வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முதல் தகவல் அறிக்கையின் படி மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் டிராக்டர் பதிவு எண். டி.என். 57 எ ஒய் 4426 என்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் போலிசார் விசாரணைக்கு பின் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரரின் டிராக்டர் பதிவு எண். டி.என். 57 எ ஒய் 4426 என்ற வாகனத்தின் ஓட்டுநர் 1ம் எதிரியின் மீது தான் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் **எ.த.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனால் எங்கள் நிறுவனம் எந்தவித இழப்பீடும் மனுதாரருக்கு

கொடுக்க கடமைபட்டதல்ல. மேலும் காப்பீடு நகல் தாக்கல் செய்யப்படுகிறது. அது **எ.த.சா.ஆ.2.** அதன்படி மனுதாரர் 3ம் தரப்பினர் அல்ல. அதனால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**குறுக்கு விசாரணை**

மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து காலத்தில் ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் அதுபற்றி தெரியாது. இருசக்கர வாகன பதிவு எண். டி.என். 73 கியூ 1714 வாகனம் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதி எல்லாம் பொய் என்று சொன்னால் சரியல்ல. இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் அந்த வழக்கு முடிவுபெறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உள்ள மேற்படி வழக்கு குறித்து எனக்கு தெரியாது. இருசக்கர வாகனம் தான் விபத்தில் ஈடுபட்டது என்றும் அதனால் நாங்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.